**தலைப்பு 234 – உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான

பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் உயர்நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளயதாகவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**மீண்டெழும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் செலவுத் தலைப்பிற்குரிய 61,948 ஆன காப்புறுதிச் செலவொன்று உயர் நீதிமன்றப் பதிவாளரின் செலவுத் தலைப்பின் கீழும் உயர் நீதிமன்றப் பதிவாளரின் செலவுத் தலைப்பிற்குரிய ரூபா | குறிப்பிட்ட வாகனம் உயர் நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமையால் அத் தலைப்பிலும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் | சரியான செலவுத் தலைப்பின் கீழ் கணக்கிடப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| 77,436 ஆன காப்புறுதிச் செலவொன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் செலவுத் தலைப்பின் கீழும் கணக்கீடப்பட்டிருந்தன. | நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமையினாலும் தலைப்பு இலக்கம் 04 இன் கீழும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

#### (அ) நிதி சாராச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியானது நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் மற்றும் திறைசேரிக் குறிப்புகளுக்கிடையே ரூபா 3,342,396 ஆன வேறுபாடு காணப்பட்டது. | CIGAS உடன் இவ் வேறுபாட்டை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைப் பிரகாரம் திறைசேரிக் கணக்கு மற்றும் திணைக்களக் கணக்கு என்பன இணக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

#### (ஆ) நிதிச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலற்ற நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மீளாய்வாண்டின் இறுதி மீதி ரூபா 21,014,984 ஆனது நிதிக் கூற்றுக்களில் வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை. | இவ் வங்கி கணக்கு தற்போது செயற்படுத்தப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாததுடன் இக் கணக்கின் மீதி பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயலற்ற கணக்கு மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

### 1.6.3 அரச உத்தியோத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 ஆம் வருடத்திலிருந்து முன் கொண்டு வரப்படுகின்ற திணைக்களப் புத்தகங்களில் அதிகமாகக் | 2011 ஆம் வருடத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற இம் மிகுதிக்கான ஆவணங்களை கண்டுபிடிக்க முடியாமையினால் | பல வருடங்களாகக் காணப்படுகின்ற தீர்க்கப்படாத மிகுதிகள் தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்த ரூபா 68,245 ஆன வரவு மீதியொன்று தீர்க்கப்படவில்லை. | இற்றை வரையில் சரி செய்யப்படவில்லை. | |
| (ஆ) | இணக்கப்படாத தனிப்பட்ட கடன் மிகுதிகள் காரணமாக வருடாந்த இணக்கக் கூற்றில் இறுதி மிகுதி ரூபா 26,860 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த இணக்கமின்மையானது மீண்டும் பரிசோதிக்கப்பட்டு எதிர்காலத்தில் சரி செய்வதற்கு அறிவுறுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தனிப்பட்ட கடன் மிகுதி இணக்கக் கூற்றின் மிகுதிகளுக்கு சமமாக இருத்தல் வேண்டும். |

### 1.6.4 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தீர்க்கப்படாத ரூபா 26,314,512 ஆன வைப்புக்களானது வைப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாததுடன் வருட இறுதியில் வைப்பேட்டின் மிகுதி மற்றும் திறைசேரிக் குறிப்பு மிகுதி என்பவற்றுக்கு இடையே ரூபா 34,841 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | ஒவ்வொரு வருடங்களுக்காகவும் வேறு வைப்புப்பதிவேடு பேணப்பட்டு வருகின்றமையால் அதன் பிரகாரம் 2020 ஆம் வருடத்திற்கான வைப்புப்பதிவேடொன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேறுபாடு தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தின் CIGAS பிரிவிற்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாத வைப்புக்கள் தீர்க்கப்படும் வரையில் முன் கொண்டு வரப்படல் வேண்டும். திறைசேறி மிகுதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் மிகுதி என்பன இணங்கியதாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு மூலதனச் செலவு விடயங்களுக்கான ரூபா 500,000 ஆன மொத்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | கட்டிடம் மற்றும் வாகனங்களுக்கான மூலதனச் செலவுகள் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் வருடத்தில் அவ்வாறான செலவுகள் எதுவும் ஏற்படவில்லை. | செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஐந்து செலவு விடயங்களுக்கான சேமிப்புக்களின் சதவீதம் நூற்றுக்கு 11 வீதத்திலிருந்து நூற்றுக்கு 99 வீதமான வீச்சில் காணப்பட்ட போதிலும் தவறுதலாக சத வீதங்கள் குறைத்துக் காட்டப்பட்டமையால் சேமிப்புக்களுக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1101, 1102, 1201, 1202, 1301 கொவிட் 19 காரணத்தினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டி 6 இன் 3.5 ஆம் பந்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒரு செலவு விடயத்தின் சேமிப்பு திருத்தப்பட்ட மதிப்பீட்டில் நூற்றுக்கு 10.06 சதவீதம் என்பதுடன் அச் சேமிப்பிற்கான காரணம் கூறப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 காரணத்தினால் பயிற்சிகள் நடாத்தப்படாமை காரணமாக ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டி 6 இன் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இரண்டு மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த முறையே ரூபா 9,300,000 மற்றும் ரூபா 18,400,000 ஆன மேலதிக ஒதுக்கங்களில் முறையே ரூபா 4,281,020 மற்றும் ரூபா 9,212,286 ஆனவை சேமிக்கப்பட்டிருந்தன. | 2020 திசெம்பர் 01 இல் புதிய நீதிபதிகளின் சத்தியப்பிரமாணத்துடன் பதிவாளர் அலுவலகத்திற்காகத் தேவையான மரத்தளபாடங்கள் மற்றும் பிற உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கங்கள் பெறப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 வரை திட்டமிட்டவாறு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவில்லை | திட்டமிட்டவாறு மேலதிக ஒதுக்கங்கள் பெறப்படல் வேண்டும். |
| (உ) | வேறு செலவுத் தலைப்பில் செய்யப்பட்ட ரூபா 185,620 ஆன செலவுகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வேறு திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவுகள் உள்ளபடியான செலவுகளில் சேர்க்கப்பட்டு காட்டப்பட்டமை குறித்துக் கொள்ளப்பட்டது. | உள்ளபடியான செலவுகளுக்கு வேறு செலவுத் தலைப்பில் செய்யப்பட்ட செலவுகளும் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிராணங்களுடன் இணங்கள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விவரமாகக் காட்டப்படுகின்றன.

### அவதானிப்புக்கள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 454 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | கொள்வனவுகள் மற்றும் விநியோகித்தல்கள் இருப்புப் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்படாமையால் இருப்புப் புத்தக மிகுதி மற்றும் உள்ளபடியான மிகுதி என்பவற்றுக்கிடையே 10 வகையான பொருட்களில் 61 அலகுகள் மேலதிகமும் மற்றும் 03 வகையான பொருட்களில 24 அலகுகள் பற்றாக்குறையும் காணப்பட்டன. | உண்மையான மிகுதியின் அடிப்படையில் இருப்புப் பதிவேட்டுப் புத்தகம் சரியாகப் பராமரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிகை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 04 மற்றும் 05 ஆம் பந்தி | உத்தியோகத்தர்களுக்கான மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்திற்காக மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தி | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனமொன்றை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்திற்காக குடிமக்கள் சாசனமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றிக்கையின் 02, 05 மற்றும் 07 ஆம் பந்திகள் | நிதியல்லாச் சொத்துக்களின் சரியான தகவல்கள் கொம்ப்ட்ரோலர் ஜெனராலுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான மற்றும் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் இவ் வருடத்தில் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வங்கிக் கணக்குச் செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கியில் இடப்படாத 2017 ஆம் வருடத்திலிருந்து முன் கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 48,978 ஆன மிகுதியொன்று தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2017 ஆம் வருடத்திலிருந்து காணப்படுகின்ற ரூபா 48,978 ஆன மிகுதி தொடர்பாக ஒழுக்காற்று செயன்முறைகள் முடிவடைந்த பின்னர் அதன் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கியிலிடப்படாத காரணம் இனங் காணப்பட்டுத் தேவையான செயன் முறைகள் விரைவில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி மற்றும் வழிகாட்டி 14 இன் பிரகாரம் வருடாந்தச் செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதுடன் முடிவடைந்தவுடன் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் வருடத்தில் இருப்புக் கணிப்பீட்டின் போது தொழில்நுட்பக் கல்லூரிக்கு கையளிப்பதற்குப் | தொழில்நுட்பக் கல்லூரிக்கு வாகனத்தை எடுத்துச் செல்லுமாறு கடிதம் மூலம் தெரியப்படுத்தி | இருப்புக் கணிப்பீட்டின் போதான பரிந்துரைகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைக்கப்பட்ட பயன்படுத்தப்படாத 03 வாகனங்கள் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் கையளிக்கப்படவில்லை. | உள்ளதுடன் நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளன. | |
| (ஆ) | ஒரு வருட காலத்திற்கு நீதி அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 3,000,000 பெறு மதியுள்ள வாகனமொன்று மற்றும் நீதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 4,000,000 பெறுமதியான வாகனமொன்று முறையாக கையளிக்கப்படுவதற்கோ மற்றும் கையேற்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எம்மால் வழங்கப்பட்ட வாகனத்தை கையளிப்பதற்கும் எங்களுக்கு வழங்கப்பட்ட வாகனத்தை கையேற்பதற்குமான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக்களை முறையாகக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை, நிதிப்பிரமாணம் 315(1), நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டம் மற்றும் 2011 சனவரி 18 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் 17 பேரிடமிருந்து பிணை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பதற்குத் தேவையான பதிவேடு நீதி அமைச்சிற்கு அனுப்பபட்டுள்ளதுடன் அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் பிணை பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட சுற்றறிக்கை நிதிப் பிரமாணம், பிணை அதிகாரச் சட்டம் மற்றும் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர்களின் வெற்றிடங்கள் 81 ஆகக் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்கள் இருவர் மற்றும் சாரதிப் பதவிக்கு ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். | நீதித்துறைப் பதிவாளர் தரம் III இல் 09 அதிகாரிகள் உயர் நீதிமன்றத் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கபபட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இரண்டு நீதித்துறை அதிகாரிகள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் நீதித் துறைப் பதிவாளர் I ம் தரத்திலான அதிகாரரிகள் இருவரின் சேவைகள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் இத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. கௌரவ மேன் முறையீட்டு நீதிபதியின் சாரதி நீதிபதி திணைக்களத்தினால் உயர் நீதி மன்றதிதிற்கு நியமிக்கப்பட்டிருந்தார். | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் நிரப்பட வேண்டியதுடன் மேலதிக அதிகாரிகளை அங்கிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இரண்டாம் நிலையில் 15 நீதிமன்ற தட்டெழுத்தாளர் பதவிகள் 2021 யூன் 21 ஆம் திகதியின் போது வெற்றிடங்களாகக் காணப்பட்டன. | அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் பிரகாரம் கௌரவ உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்புகேற்றவாறு பதவியினர் அதிகரிப்பதற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இற்றை வரையில் ஆட்சேர்ப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |